தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி.பி. 2016 | கும்பம் 13 (24-2-85) | 65 காசுகள் | இதழ் எண்: 52 | பகுதி 3-6

தந்திரங்களும் சூழ்ச்சிகளும் தமிழின மீட்சிக்கு உதவா!

நேரிடையான போராட்டமே தேவை!

தமிழகத்தில் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கவேண்டும்!

தில்லியிடம் போரிடாமல், தமிழீழ மக்களைக் காக்கமுடியாது!

திரவிடக் கட்சிகள் மாநில எதிர்ப்பைக் கைவிட்டு, நடுவணரசிடம் எதிர்ப்புக் காட்டவேண்டும்.

தமிழினத்தின் இறுதிக்கால முயற்சி இது!

துணிவுடனும், தெளிவுடனும், கொள்கைகளை வெளிப்படுத்துவது நல்லது!

பெரியார் செய்யத்தவறிய தனி நாட்டுப் போராட்டத்தை நாம் செய்வோம்!

தமிழீழத் தமிழர்களின் போராட்டம் ஓர் உள்நாட்டு உரிமைப் போராட்டமாகவே உருவாகிவிட்டது. அங்குள்ள தமிழர்கள் ஒட்டு மொத்தமாகவே கொன்று குவிக்கப்படுகிறார்கள். அந்நிலையை உலகெங்கணும் உள்ள தமிழின மக்கள் தடுக்கவும் முடியாமல், எடுக்கவும் இயலாமல் தவியாய்த் தவிக்கிறார்கள். அவர்களுக்கு மிக அருகில் உள்ள தமிழ்நாட்டுத் தமிழர்களாலேயே ஒன்றும் செய்ய இயலவில்லை. மொத்தத்தில் தமிழினம் சிறிது சிறிதாக அழிக்கப்பட்டு வருவதாகவே உணரலாம்.

இந்நிலையில் நாம் என்ன செய்துவிட முடியும்? நம் நிலை அங்குள்ளவர்களின் நிலையை விடக் கீழானது; கேடானது. நாம் இங்கு அடிமைகள். தில்லியின் துமுக்கிக்கைகளுக்கு நாம் ஆட்படாமல் போனாலும், அதன் அதிகாரக் கைகள் நம்மை மிகவும் அழிவுக்கு உள்ளாக்கி வருகின்றன. இக்காலகட்டத்தில் நாம் நம் உண்மையான கொள்கையைத் தெளிவாக வெளிப்படையாக அறிவிக்காமல், வெறும் அரசியல் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கொண்டு நம்மை மீட்டுவித்துக் கொள்ள இயலாது. நேரிடையான போராட்டங்களின் வழியாகவே, நம் இனத்தை நாம் விடுவிக்க முடியும். அந்த உணர்வுக்கு நம்மைத் தில்லிவிடவர் கொண்டு வந்து விட்டனர்.

விரைவில் நாம் நம் கருத்துகளை-அரசியல் வெறுப்புகளை- **ஒத்துழையாமை இயக்க** வழியாகவோ **வரிகொடா இயக்க** வழியாகவோ, தில்லிக்கு உணர்த்தியாக வேண்டும். தில்லியிடம் போரிடாமல், தமிழக மக்களையோ, தமிழீழ மக்களையோ காக்க முடியாது. எனவே, இங்குள்ள, தமிழின் நலம் நாடும் திராவிட இயக்கங்கள், கட்சிகள் அரசியல் முறையில் இங்குள்ள மாநில அரசை எதிர்த்துக் கொண்டிருப்பதைக் கைவிட்டு, உரிமை முறையில், நடுவணரசிடம் தங்கள் திர்ப்புகளை வெளிப்படையாகக் காட்டுதல் வேண்டும். தமிழினத்தின் இறுதிக் கால முயற்சி இது. எனவே மிகத்துணிவுடனும், தெளிவுடனும் கொள்கைகளை வெளிப்படுத்துவது நல்லது. அண்மையில் மாங்கொல்லையில் நடந்த கூட்டத்தில் கலைஞர், **'இலங்கைத் தமிழர்களைத் தில்லியரசு காப்பாற்றத் தவறினால், இந்தியாவிலிருந்து தமிழகம் பிரியும்'** என்று' கருத்தறிவித்துள்ளார். (விடுதலை, சென்னை, 24-2-85). நாம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்திவரும் கருத்து இது கலைஞர் இப்பொழுதாவது அதை வெளிப்படுத்தியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

பெரியார் செய்யத் தவறிய, அல்லது அவருடன் சேர்ந்து ஒத்துழைப்புத் தரத் தவறிய, தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தை இப்பொழுது நாம் செய்யத் தொடங்க வேண்டும். தனித் தமிழகம் பிரியாமல், நமக்கென்று, ஒரு முழு இறைமைசான்ற உரிமைத் தமிழ் நிலத்தை அமைத்துக் கொள்ளாமல், தமிழினத்துக்குள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள இயலாது. இதை நாம் ஒவ்வொருவரும் வெளிப்படையாக வலியுறுத்தும் காலம் வந்து விட்டது. நமக்குள்ளிருக்கும் அனைத்து வேறுபாடுகளையும் மறந்துவிடவேண்டும். நம் தனி நிலைகளைத் துறந்துவிடவேண்டும். நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்! - தமிழ்நாடு தமிழருக்கே!

—பெருஞ்சித்திரனார்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், [illegible]றிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

இன விடுதலைக்குப் போராடும் வடக்கு அயர்லாந்து நாட்டு மக்கள்!

— கரிகாலன் —

வரலாற்றுச் சிறப்பு மிக்க நாடுகளில், இங்கிலாந்து முதன்மையானது. பலநாடுகளின் வரலாறுகளில் தொடர்பு கொண்ட நாடு. ஒரு காலத்தில் பல நாடுகளை வென்று ஆட்சி செலுத்திய நாடு இங்கிலாந்து.

இங்கிலாந்து நாட்டு ஆட்சியில் இன்று பல நாடுகள் விடுதலை பெற்றுவிட்டன என்றாலும் இன்றும் சில சிறு நாடுகள் அதன் ஆட்சியில் உள்ளன. அவற்றில் ஒன்று தான் "வடக்கு அயர்லாந்து" நாடு. அதனை, இங்கிலாந்து அல்ச்ட்டர் மாநிலம் என்கிற பெயரில் தன்நாட்டோடு இணைத்துக்கொண்டு உள்ளது.

உலக வல்லரசுகளில் ஒன்றாக இன்றும் விளங்கும் இங்கிலாந்து என்கிற பிரிட்டிசு அரசு அயர்லாந்து மக்களின் விடுதலைப் போரில் செயலற்று-தான் இருக்கின்றது. சிலநாட்களுக்கு முன்பு பிரிட்டிசு தலைமையமைச்சரையும் அவருடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்களையும் வெடிகுண்டு வைத்துக் கொல்ல முயற்சி செய்த நிகழ்ச்சியும், இந்த நிகழ்ச்சியினைத் தாங்கள்தாம் செய்தோம்; உறுதியாக பிரிட்டிசு தலைவர்களை நாங்கள் கொல்லாமல் விடமாட்டோம்' என்று அயர்லாந்து நாட்டுவிடுதலைப்படை அறிவித்து இருக்கும் வீர முழக்கமுமே அந்த நாடு விடுதலைப் போர் நடத்திக் கொண்டுள்ளது என்பதற்குச் சான்று. தன்னிடம், எத்தனைப்பெரிய வலுமிக்க போர்ப்படையும் அச்சம்தரும் போர்க் கருவிகளும் குவித்து இருப்பினும் எதிரி நாடுகளைத் தாக்கக் கூடிய, போர் வானூர்திகள், வலுமிக்க கடற்படை, இத்தனை வாய்ப்புகள் பெற்று இருப்பினும், சின்னஞ்சிறிய நாடாகிய வடக்கு அயர்லாந்து மக்கள் தங்களின் இன விடுதலைப் போரில் இன்னும் வெற்றி காணமுடியவில்லை.

அழகுமிக்க வீரர்கள், வீரமிக்கவர்கள், பண்பு மிக்கவர்கள், யாரிடமும் வம்புக்குச் செல்லாதவர்கள் அயர்லாந்து மக்கள். அத்தகையவர்களின் ஒன்றுபட்ட குமுகாயத்தை அழித்தவர்கள், சிதைத்தவர்கள் நாடு, இனம், குமுகாயம், மொழி பண்பாடு இவற்றை அழித்துக் கூறு போட்டவர்கள் இங்கிலாந்துக்காரர்கள் என்றும், எந்தக் காலத்திலும், இணைய முடியாத அளவிற்குத் தெற்கு, வடக்கு என்று சமயத்தாலும், அண்ணன்-தம்பி, தாய்-தந்தையர், அக்காள்-தங்கை இவர்களைக் குடும்ப அளவிலும் பிரித்த கொடியவர்களாகவும் அவர்களைக் கருதுகிறார்கள் அயர்லாந்து மக்கள். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டு மீது பிரிட்டிசு நாடு படை எடுத்து வெற்றி கொண்டு, அந்நாட்டைத் தன்னாட்டோடு இணைத்து கொண்டதுமல்லாமல் அந் நாட்டின், மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றையும் அழித்து அனைத்துத் துறையிலும், ஆங்கிலத்தையே புகுத்தியது பிரிட்டிசு ஆட்சி! ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்களை எல்லாம் இரக்கமின்றிக் கொன்று குவித்தார்கள், ஆங்கிலேயர்கள். அயர்லாந்தில் குடியமர்த்தப்பட்ட ஆங்கிலேயர்களுக்கு அவர்களுக்கு நிலமும் பொருளுதவிகளும் பிற அனைத்து உதவிகளும் தரப்பட்டன. ஒவ்வோர் ஆண்டிலும் விடுதலைக்கிளர்ச்சியால் பல ஆயிரக்கணக்கான அயர்லாந்து வீர இளைஞர்கள் தூக்கிலிடப்பட்டனர் அல்லது சுடப்பட்டனர். பல ஆயிரக்கணக்கான வீர இளைஞர்கள் தங்கள் தாய் நாடான அயர்லாந்தை விட்டுப் பிரிந்து பிரிட்டிசுக்குப் பகை நாடுகளின் படைகளில் சேர்ந்து, ஆங்கிலேயர்களை எதிர்த்தார்கள். ஆங்கிலேயர்கள் எந்த வகையிலும் தோற்க வேண்டும். அதுவே அந்த இளைஞர்களின் வீரமிக்கக் கொள்கை நோக்கமாக இருந்தது.

ஒவ்வோர் ஆண்டிலும், ஆங்கிலேயர்களின், அடக்குமுறையின் ஆட்சியின் கடுமையினை பொறுத்துக் கொள்ள முடியாமல், அயர்லாந்து மக்கள், குடும்பம், குடும்பமாக, ஆயிரக்கணக்கில் அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேறினர். இன்று இலங்கையில் சிங்கள அரக்க அரசு தமிழ் இளைஞர்களை வேட்டையாடிப் பிடித்து, அவர்களை அழிப்பதுபோல் ஆங்கிலஆட்சி அயர்லாந்து வீரஇளைஞர்களை வேட்டையாடிப் பிடித்துச் சிறையில் அடைத்தது. கூச்சமின்றி, வெட்கமின்றி, அயர் மக்களின் விடுதலைப் போரைப் பல அடக்குமுறைகளால் படைகளைக் கொண்டு அடக்கியது.

குறிப்பாக, பதினேழாம் நூற்றாண்டில், அயர்லாந்தில் மிகப் பெரிய கிளர்ச்சி ஒன்று தோன்றியது. அக் கிளர்ச்சியினை, அன்று இங்கிலாந்து நாட்டை ஆண்ட முதலாம் சேம்சு என்கிற கொடிய மன்னன் மாந்தத் தன்மையற்ற வகையில், இரக்கமின்றிப் படைத்துறையைக் கொண்டு அயர்லாந்து மக்களை அடக்கி ஒடுக்கினான். அவன் அடக்குமுறையில் முதியோர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், இளம் பெண்கள் சின்னஞ்சிறிய மழலைகள் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர். அவனைப் போன்ற கொடிய அரக்கன் உலகில் எந்தநாட்டிலும் மன்னனாக இருந்திருக்க முடியாது.

முதலாம் சேம்சு மன்னன் அத்துடன் நின்றானா? இல்லை. இங்கிலாந்திலிருந்தும், இசுக்காட்லாந்திலிருந்து பல ஆயிரக்கணக்கான குடும்பங்களை, வடக்கு அயர்லாந்துபகுதியாகிய (அல்ச்ட்டர் மாநிலப்பகுதியில்) குடியமர்த்தினான். அங்கிருந்து பல ஆயிரக்கணக்கான 'அயர்லாந்து மக்களைப் புரட்சிக்காரர்கள், கிளர்ச்சிக்காரர்கள், அரசஇரண்டகர்கள் என்று குற்றஞ்சாட்டி அவர்கள் உடைமைகளைப் பறித்து ஆங்கிலேயருக்கு அளித்தான்.

சேம்சுமன்னன் அயர்லாந்துமக்களுக்கு இழைத்த கொடுமைகள், கொஞ்சம் நஞ்சமல்ல. அவன் செய்த கொடுமைகளுக்கெல்லாம் முடிவைத்ததுபோன்று மிகப் பெரிய குற்றம், அவன் ஆட்சிக்காலத்தில் வடக்கு அயர்லாந்து அல்ச்ட்டார் மாநிலத்தில ஆங்கிலேயர்களை ஆயிரக்கணக்கில் குடியமர்த்தி அயர்லாந்து நாட்டையே பிளவு படுத்திவிட்டான். அவன் செய்த மிகப்பெரிய குற்றத்தால் இன்றும் அயர்லாந்து தெற்கும், வடக்கும் ஒன்று சேரமுடியாமல் இரு துருவங்களாக விளங்குகின்றன.

அயர்லாந்து மக்கள் நடத்தும் மிகநீண்ட விடுதலைப்போரில் இன்றை அல்ச்ட்டார்பகுதி ஆங்கில நாட்டுக்கு ஆதரவாகவே இருந்து வந்தது.

உலக இரண்டாம் பெரும் போருக்குப் பின்னர் "டிவேலாரா" என்பவரின தலைமையின்கீழ் தெற்கு அயர்லாந்து விடுதலை பெற்றுத் தனியாட்சி நடத்துகின்றது. அயர்லாந்து விடுதலை பெறுகின்ற நேரத்தில் அல்ச்ட்டர்பகுதி தெற்குப்பகுதியுடன் இணைய மறுத்தது எனினும், இன்று நடக்கும் வடக்கு அயர்லாந்து மக்களின் இன விடுதலைப்போருக்கு தெற்கு அயர்லாந்து அரசு ஆதரவு தருகின்றது.

இங்கிலாந்துநாட்டு மக்களும் வடக்கு அயர்லாந்து (அல்ச்சட்டர்) மக்களும் சமயத்தால் ஒன்றுபட்டாலும் இனத்தால் வேறுபட்டவர்கள். எனவே விடுதலைப்போரில், அயர்லாந்து தேசிய இனமே மேலோங்கி நிற்கிறது.

அயர்லாந்துநாட்டுத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பாலூட்டும் போது, மொழிஉணர்வையும், நாட்டுணர்வையும், வீரஉணர்வையும் கலந்து ஊட்டி வளர்க்கிறார்கள்.

ஆங்கிலேயர்களின் கொடுங்கோலாட்சியில் அயர் மக்களின் தாய்மொழி (சால்மொழி) அழிக்கப்பட்டது. அந்த சால்மொழி சிற்றூர்களில் மட்டும் வழங்கும் மொழியாக்கப்பட்டது. விடுதலைக்கு வீரஉணர்வு ஊட்டுவது, தாய்மொழிப்பற்றே என்பதை உணர்ந்த அயர்லாந்து அறிஞர்கள், தங்களின் தாய்மொழியாகிய, சால்மொழியினை, எடுத்துக்கூறி ஆங்கிலத்தின்பால் பெரும் காதல்கொண்டு இருந்த மக்களிடத்தில் தாய்மொழிப்பற்றினை வளர்த்தார்கள். ஆங்கில அரசின் மிகவலிவான எதிர்ப்புக்கிடையிலும் மக்கள் தங்கள் தாய்மொழி,'சால்மொழி'யினை வளர்த்தார்கள். ஆங்கிலத்தில் பேசுவதை விடுத்துச் சால்மொழியில் பேசுவதினையே பெருமையாகக் கொண்டார்கள். அவர்களின் தாய்மொழிப்பற்றே அவர்களின் நாட்டு விடுதலைக்குப் பாதை அமைத்தது.

மொழிப்பற்றையும், நாட்டு, இனம், ஆகிய உணர்வுகளையும் தமிழர்களாகிய நாம் சின்னஞ்சிறிய நாட்டுமக்களாகிய அயர்லாந்து மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். மொழிப்பற்றில்லாத மக்கள் மக்களே அல்லர். மொழிப் பற்றைவிட மொழிவெறி கொண்ட இனமே விடுதலைபெற முடியும். தமிழர்களாகிய நம்மிடம் மொழிப்பற்றும் இனஉணர்வும், கொஞ்ச, கொஞ்சமாகக் குறைந்துவருவது, எதிர் காலத்தில், தமிழ்இனம் படுகுழியில் வீழ்ந்துவிடும் என்பதற்கு அறிகுறியாகும். விடுதலைப்போரில் தமிழ தூங்கியது போதும். இனியாவது விழிக்கட்டும். ()

சட்டமன்ற உறுப்பினர்களைத் திருப்பி அழைக்க ஒப்போலையாளர்க்கு உரிமை

உசுபெக்கித்தான் மீமிசை சோவியத்து மன்றத்திற்கு, (நாடாளுமன்றம்) அந்தக் குடியரசினது நூல் வெளியிடுதல், அச்சிடுதல் மற்றும் நூல் விற்பனைக்கான குழுவின் தலைவரான சியாத் சென்பயேவ் உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்ட பொழுது, சுறுசுறுப்பாகவும், மனநிறைவாகவும் தம் கடமைகளில் ஈடுபட்டார். ஒப்போலையாளர்களை அடிக்கடி சந்தித்துப் பேசுவார்; அவர்களுடைய கோரிக்கைகளையும், கருத்துகளையும் கவனிப்பார்; தேர்தலின்போது ஒப்போலையாளர்கள் கூட்டாக இட்ட பணிகளை உண்மையுடன் நிறைவேற்றி வந்தார்.

நாள்கள் செல்லச்செல்ல எசென்பயேவ், சட்டமன்ற உறுப்பினருக்கான தம் கடமைகளைப் புறக்கணிக்கத் தொடங்கினார். ஒப்போலையாளர்கள் வாழும் இடங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் சென்று மக்கள் குறைகளை அறிவதைக் குறைத்துக் கொண்டார். தம் தொகுதியில் பண்பாட்டு மாளிகை நிறுவுவதற்கான தம் உரிமையைப் பயன்படுத்தத் தவறி விட்டார். ஒப்போலையாளர்கள் இட்ட மற்றப் பணிகளையும் நிறைவேற்றவில்லை. தவிர, சட்டமன்ற உறுப்பினர் என்ற தம் பெருமைநிலையைத் தவறான முறையில் பயன்படுத்திப் பெரும் தொகையைக் கடனாகப் பெற்றுச், சொந்தத்தில் இரண்டு வீடுகள் கட்டிக் கொண்டார்.

அவர், குமுகாயத்திற்கான தம் கடமைகளைப் புறக்கணித்து விட்டுச் சொந்த நலன்களைக் கவனித்துக் கொள்வதாகவும், எனவே, சட்ட மன்றத்தில் மக்கள் படிநிகராளியாக இருக்கும் தகுதியை இழந்து விட்டார் என்றும் தொழிலாளர் பொதுக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டன.

சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அவரை விலக்கிவிட வேண்டும் என்ற இந்தக் கூட்டங்களின் கோரிக்கை உசுபெக் நாடாளுமன்றத் தலைமைக் குழுவுக்குச் சென்றது. இதன் விளைவாக, எசென்பயேவின் தொகுதியில், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குதல் செய்வதற்கான ஒப்போலைப் பதிவுக்கு நாள் குறிப்பிடப்பட்டது

இதுபோன்ற சமயங்களில் எப்போதும் நிகழ்வது போல, அவருடைய தொகுதிகளில் வெளிப்படையான ஒப்போலைப் பதிவின் மூலம் அவரைப் பற்றிய மக்கள் கருத்து அறியப்பட்டது இந்த ஒப்போலைப் பதிவில், அவர் பதவியிலிருந்து விலக்கப்படுவதை ஆதரித்தோ, எதிர்த்தோ மக்கள் ஒப்போலை போடலாம். குறிப்பிடப்பட்ட நாளில் 74 ஒப்போலையாளர் கூட்டங்கள் நடந்தன. மொத்தம் உள்ள 14,648 ஒப்போலையாளர்களில் 14,508 பேர், எசென்பயேவ் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கப்படுவதை ஆதரித்து ஒப்போலையளித்தனர். ஒப்போலையாளர்களின் இந்தத் தீர்ப்பை நாடாளுமன்றத் தலைமைக் குழு ஏற்றுக் கொண்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினரைப் பின்னர் தேவையானால் திருப்பி அழைக்கும் உரிமை, சோவியத்துக் குடியரசுக் கோட்பாடுகளில் ஒன்றாகும். சோவியத்து அவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் படிநிகராளிகள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டால், அவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமையைச்சோவியத்து ஒன்றிய அரசியல் சட்டமும், சோவியத்துக் குடியரசுகளின் அரசியல் சட்டங்களும் ஒப்போலையாளர்களுக்கு அளித்துள்ளன.

இதற்கான நடைமுறைகளை விளக்கி ஒரு தனிச் சட்டம் இயற்றப் பட்டுள்ளது. "சோவியத்து அவையின் எந்த உறுப்பினராவது தம்மிடம் மக்கள் வைத்த நம்பிக்கையை இழந்து விட்டாலும், அல்லது மக்கள் படிநிகராளி என்ற உயர்ந்த தன்மைக்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபட்டாலும், ஒப்போலையாளர்களின் பெரும்பான்மை முடிவின் மூலம் அந்த உறுப்பினரைப் பதவியிலிருந்து விலக்கி விடலாம்" என்று அந்தச் சட்டத்தின் முதல் கருத்து கூறுகிறது. பொதுக் கூட்டங்களில் வெளிப்படையான ஒப்போலைப் பதிவில் பெரும்பான்மை ஒப்போலைகள் மூலம் இந்த முடிவு செய்யப்படுகிறது. சட்ட முறைப்படியிலான நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், ஒப்போலை முடிவுகளை வரையறுக்கவும், பொது மக்கள் படிநிகராளிகளையும், உழைப்புக் கூட்டமைப்புகளின் படிநிகராளிகளையும் கொண்டு தனிச்சிறப்புத் தொகுதிக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

சோவியத்து ஒன்றியத்தில் உள்ள 15 குடியரசுகளிலும் இதுபோன்ற சட்டங்கள் உண்டு.

— சியோர்கி திமோவ்

மொழி - இனவுணர்வுக்கு அடித்தளமானது!

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 52 (24-2-85) பகுதி 3-6

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்!

- கழக முதல்வர் -

1) 'கடைவிரித்தேன் கொள்வாரிலர்' – என்று வள்ளலாரால் மதிப்பிடப் பெற்றவர்கள் தமிழர்கள்.

2) விலைமதிப்பற்ற ஓர் உலக முதன்மொழியாகிய தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மதிப்புமிக்க ஓரினம் தன் பண்பாட்டையும் நாகரிகத்தையும், கலை அறிவுக் கூறுகளையும் தாழ்த்திக் கொண்டு, இன்று போலி அரசியலாலும், புன்மைப் பண்பாடுகளாலும் புறநிலை நாகரிகத்தாலும் தாழ்ந்து, தன் மொழி, இன, நாட்டை மாற்றார்க்கு அடிமை கொடுத்து விட்டதே என்னும் ஆரா மனக் கவலையால், கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகத் தென்மொழிவாயிலாகக்கூறி வந்த, கருத்துரைகளை ஒரு கட்டுக் கோப்பாக அடைவு செய்து தலையாய ஏழு கொள்கைகளாக வகுத்துக் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஓர் இயக்கத்தைத் தொடங்கினோம்.

3) இயக்கம் என்பது தானாக இயங்கு நிலை கொண்டது என்றும், கட்சி என்பது, இயக்க இயங்கிப் பல அடக்கப்பட்ட செயல்பாடுகளால் கட்டமைப்புக் கொண்டது என்றும் அனைவரும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் என்ற உணர்வில், இதை ஓர் இயக்கமாக அமைத்து, இதற்கு **உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்** என்னும் பெயரைக் கொடுத்தோம்.

4) இதைத் தொடங்கும் பொழுதே நம்மில் பலரும் இதை வரவேற்றும், சிலர் இதன் கொள்கைகளில் முழு ஈடுபாடும் கொள்ளாமல் இதனை மறைமுகமாக விரும்பாமலும் இருந்ததை நன்கு உணர்ந்தோம்.

5) குறிப்பாக இதன் பொதுவுடைமைக் கொள்கையைச் சில நிலவுடைமையாளர்கள் எதிர்த்தனர். சிலர் இதன் அமைப்பு நிலைகளில் கருத்து வேறுபாடு காட்டினர். மற்றுஞ் சிலர் இதனை ஓர் அரசியல் இயக்கம் போல் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று உளவு கூறினர்; வேறு சிலர் இதில் தூய தமிழர்களைத் தவிர, பிற திரவிட இனத்தவரையோ, பார்ப்பனரையோ உறுப்பினராக்குதல் கூடாது என்றும் கருத்தறிவித்தனர். அனைவருக்கும் அமைவு கூறி, இதனை ஒருவாறு தமிழ் தமிழின தமிழ்நாடு என்னும் மூவுணர்வுக்குப் பொருந்தி வரும், தமிழும் தமிழினத்தையும் சார்ந்து வர விரும்பும் அனைவரும் இதில் ஈடுபடலாம் என்று நடைமுறைப் படுத்தினோம். எனவே, பிற திரவிட மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவரும் இதில் மிக்க ஈடுபாடு கொண்டு இதன் கொள்கைகளுக்கென உழைக்க முன்வந்தனர். அவ்வாறே பார்ப்பனர்கள் சிலரை, அவர்களின் மனவுணர்வுத் தெளிவின்மை கருதி இதில் ஈடுபாடு கொள்ளவிடாமல் எச்சரிக்கையாகவே இன்று வரை இருக்கின்றோம்.

6) பொதுவாகவே, மக்கள் இனத்தவர்கள் யாவற்றினும் தம் வாழ்வியல் முயற்சிகளையே பெரிதும் முதாமையானவையாகக் கருதுவதையும் பிற கொள்கைக் கோட்பாடுகளை அவற்றுக்குத் துணையாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்னும் உணர்வையே பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நாம் தெளிவாகவே உணர்ந்திருக்கின்றோம்.

7) எனவே, இவ் வுண்மையான உழைப்பியக்கத்திற்கு மிகவும் பொருத்தமான தொண்டர்களைப், பெரும் முனைப்பும் விழிப்பும் காட்டித் தேடவேண்டுவதாயிற்று. பிற இயக்கங்களில் ஓரிரண்டைத் தவிர, உறுப்பினராக விரும்புபவர்கள் அனைவரையுமே இணைத்துக் கொள்ளும் நிலையே உள்ளது.

8) இதற்குத் தொண்டர்களாக வரவிரும்பிய பெரும்பாலரும் மற்ற இயக்கங்கள், கட்சிகள் போல், இதிலும் ஏதாவது அவர்களின் முயற்சிகளுக்கு-உழைப்புகளுக்கு ஏற்ற ஊதியம் கிடைக்குமா என்னும் நோக்கத்திலேயே ஈடுபட விரும்பினர் என்பதை, இதைத் தொடங்கிய சில நாள்களிலேயே நன்கு உணர முடிந்தது. மிகமிகச் சிலரோ, தம் அறிவுழைப்பை மட்டுமே இதன் விளைவுகளில் ஏதோ சிலவகைகளில் ஈடுபடுத்தி ஏதாவது ஓரிரு விளைவு காணவேண்டும் என்னும் நோக்கத்துடன் முன்வந்ததாகத் தெரிந்தது.

9) மற்றவர் பலரில், சிலர் தம் உழைப்புக்கேற்ற ஊதியம் ஏதோ சிறு அளவில் வந்தாலும் நல்லது என்னும் நோக்கிலேயே ஈடுபட விரும்பியராகவும் தெரிந்தனர்.

10) ஆனால், முழு அளவில் இதன் உழைப்பில் தம்மை ஒப்படைத்துக் கொள்ளும் விருப்புடனும் ஈகங்கள் பல செய்ய, இழப்புகள் பலவற்றை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்துடனும் தம்மை முழுநேரத் தொண்டர்களாக மாற்றிக் கொண்டு ஈடுபடும் உள்ளத் திறமும் எவருமே முன்வராதது எமக்குப் பெரு வியப்பையும் பெரு வருத்தத்தையும் பெரும் ஏமாற்றத்தையும் தந்தது. சிலநேரங்களில் நம் இனமக்களின் பொதுநிலைத் தொண்டுச் சமைவின்மையை எண்ணி உள்ளம் குமைந்தோம்.

11) இந்நிலைக்குங்கூட நம் இனத்தவரின் அறியாமையும், வாழ்வாசையும், நெடுநாளைய அடிமைத் தனமுமே காரணங்களாக இருக்கமுடியும் என்று கருதி, ஏதோ ஓரளவாகிலும் தம்மை இதில் ஈடுபடுத்திக்கொண்டு ஒரு சில நிலைகளில் தம் உழைப்பைத் தர முன்வந்தவர்களைக் கொண்டு, ஆங்காங்கு, சில மாவட்ட அமைப்புகளையும் நகர, ஊர்க் கிளை அமைப்புகளையும் உருவாக்கிச் செயல்படச் செய்தோம்.

12) முதலில், நம் கொள்கைகளை மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதையும் அவற்றின் வழி மக்கள் ஓர் அறிவுத் தெளிவு பெறவேண்டும் என்பதையுமே கருத்தாகக்கொண்டு அவ்வியக்க அமைப்புகள் அங்வாறு தோற்றுவிக்கப் பெற்றன. (பிற இயக்கங்கள் உலகளாவிய தமிழின மக்களின் முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டு, தம் கொள்கைகளை வகுத்துக் கொள்ளவில்லை என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.)

13) அமைக்கப்பெற்ற இவ்வியக்க அமைப்புகள் சிற்சில இடங்களில் நன்கு செயல்படுவதையும், இதன் கொள்கைகளை மக்கள் நன்கு உணர்ந்து வரவேற்பதையும் கண்ட, வேறு இயக்கங்களைச் சேர்ந்த சிலர் இதற்கு எதிரிடையான முயற்சிகளில் ஈடுபட்டதை நாளடைவில் உணரத் தொடங்கினோம்.

14) விவேகானந்தரின் ஒரு கூற்றுப்படி, எவ்வளவு உயர்ந்த கொள்கையானாலும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள நான்கு படி நிலைகள் உண்டு என்பதையும், அவை, **ஏளனப்படுத்துதல், இழிவு படுத்துதல், எதிர்த்தல், ஏற்றுக்கொள்ளுதல்** ஆகியன என்பதையும் நாம் நன்கு உணர்ந்திருந்ததனால், எந்த ஏளனத்திற்கும், இழிவிற்கும், எதிர்ப்புக்கும் நாம் பொருட்படுத்தாமலும், அஞ்சாமலும், இயக்கத்தின் சிற்சில முயற்சிகளைக் கடந்த மூன்றாண்டுகளாகச் செய்து வருகிறோம்.

15) எந்த ஓர் இயக்கத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் பரவுதலுக்கும், விளைவு ஏற்படுவதற்கும், தொடர்ந்த பொருள் வலிமையும், வினை ஆள்கள் வலிமையும் கட்டாயம் தேவை என்பதை நாம் என்றுமே உணரத் தவறியதில்லை.

16) அத்துடன் வீழ்ந்து பட்ட ஒரு குமுகாயத்தினை மீட்டெடுக்கின்ற முயற்சியில், அதன் தன்மைகளை ஏதோ ஒரு கோணத்தில் ஓரளவானும் உணர்ந்து கொண்ட சிலரோ பலரோ, அதன்முன்னேற்ற முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தவே செய்வர்; அவர்களைத் தடுக்க வியலாது; ஒவ்வொருவரும் அம்முயற்சிகளின் தேவையை முழுஅளவிலும் உணர்ந்து கொண்டுதாம் ஈடுபடுவர் என்பதும் இயலாததே; இவற்றை, நாம் நன்கு உணர்ந்திருந்தோம்.

17) இந்நிலையில், நமக்குள்ள வலிவற்ற தன்மைகளையும் பிறர்க்குள்ள வலிவான கூறுகளையும் நாம் உணராமல் இருத்தல் இயலாது; ஆகையால், வந்த சிறுசிறு ஏளனப்படுத்துதலையும், இழிவுகளையும், எதிர்ப்புகளையும் - இயக்கத்தின் போங்கு நிலைகளே என்பதையும், மற்றுப் பொருளாலும், ஆள்களாலும் பிறவற்றாலும் நாம் வலிவுகுன்றியிருப்பதும், உண்மையான - நேர்மையான - முயற்சிகளுக்குத் துணையாகின்ற சில அளவுக் கூறுகளே என்பதையும் நாம் நன்கு அறிந்திருந்தோம். எனவே, எந்தச் சூழ்நிலைக்குமே நாம் எந்த ஒரு சிறு அடி வைப்பையும் மாற்றிக் கொள்ளத் தேவையில்லாமல் இருந்து வந்தோம்.

18) இவ் விடத்தில் நம் இயக்கத்திற்கும், நம்போலவே, நம், தமிழின், தமிழினத்தின், தமிழ்நாட்டின் முன்னேற்றங்களுக்கு உழைத்து வருவதாகக் கூறுகின்ற பிற இயக்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெளிவாகவே அவற்றின் கொள்கை அளவிலும், செயல்கள் அளவிலும் விளக்கப்படுத்துவதும், விளங்கிக் கொள்வதும் மிகவும் நல்லதாகும் என்பதால், அவற்றைப் பற்றியும் சில சொல்லவேண்டியுள்ளது.

19) தமிழகத்தில் உள்ள சிலசிறு அமைப்புகள் தவிர, தமிழின நலம் நாடும் பெரிய அமைப்புகள் சிலவற்றுக்கு, ஏற்கனவே கொழுத்த பொருள்வலிவும், பரந்த ஆள் வலிவும் முன்னரே அவற்றின் இயக்க முன்னோடிகளால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம். (சுருக்கமாகச் சொல்வதானால், அவ்வியக்கங்களைத் தோற்றுவித்த தலைவர்கள், உழுது, வித்திட்டு, விளைவு செய்ததை, இப்பொழுதுள்ளவர்கள் அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள் நாம் அவ்வாறன்று; நாமே உழுது, விதைத்து, எருப்போட்டு, நீரூற்றி வளர்க்க வேண்டியுள்ளது) ஆனாலும் அவற்றையும் அவற்றால் மேலும் மேலும் வந்து குவியும் வருவாய்களையும், ஆதரவுகளையும் வைத்துக் கொண்டு, ஏதோ மேலுக்கு மெழுகு பூசுகிற வகையில், சிற்சில உயிர்வாழும் செயல்களாக, தமிழினத்தின் முழு விளைவுக்கும் போதாத செயல்களையும் திட்டங்களையும், மக்களிடத்துத் தம் கட்சிப் பணங்களை வாரியிறைத்துப் பேரளவில் விளம்பரப் படுத்திச், செய்வதன்வழி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தங்களையும், தங்கள் உற்றார் உறவுகளையும், தம்மைச் சார்ந்தவர்களையும் வளமும் நலமும் படுத்திக் கொண்டு, வளர்த்தெடுத்துக் கொள்கிறார்களே தவிர, நமமைப் போல் சமசுக்கிருதத்திற்கு அடிமையும், பிற இருபத்தைந்து அயன் மொழிகளுக்கு ஆளுமையும் பட்டிருக்கிற தூய, இனிய, தனிச்செந்தமிழ் மொழியை மீட்கவும்; ஏற்கனவே மதத்தாலும், இனத்தாலும், பிற கலை, அறிவுக் கூறுகளாலும் ஆரியத்துக்கு அடிமையும், பொருளியலாலும் அரசியலாலும் மொழியாலும் வடவர்க்கும் இந்திக்கும் ஆளுமையும் பட்டிருக்கின்ற - மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே தனிச்சிறந்த நாகரிகமும் பண்பாடும் பெற்றிருந்த பழந்தமிழ்ப் பேரினத்தை விடுவிக்கவும்.

(19-1) இனி, என்றென்றும் தவிர்க்கவியலாதபடி, வெள்ளையரிடமிருந்து, வடநாட்டுப் பிராமணிய முதலாளியரிடம் கைமாறி, வல்லாண்மைப் பட்டிருக்கின்ற தமிழ் நிலத்தின், எல்லாத் தளைகளையும் அறுத்தெறிந்து விடுதலை செய்து மீட்கவும்- அவ்வியக்கங்களிடம் யாதாமொரு திட்டவட்டமான கொள்கையோ, கட்டுக்கோப்பான முயற்சிகளோ, துவளாமையும் துணிவுடைமையும் கொண்ட செயல்களோ இன்றுவரை இல்லை. அவற்றின் கொள்கைக் கூப்பாடுகளும், பிற தேவையற்ற செயல் முயற்சிகளும் தமிழினத்தின் எந்த ஓர் உறுப்பையும் கழற்றவோ, பழுது பார்க்கவோ, தேவையானால் மாற்றியமைக்கவோ உதவாதவை. இவற்றை வெளிப்படையாகச் சுட்டிச் சொல்வதானால், பலருக்கும் வருத்தம் உண்டாக்கும் தேவையற்ற அவ்வருத்தத்தை வருவித்துக் கொள்ள நாம் விரும்பவில்லை.

(19-2) மேலும், தமிழின முன்னேற்றத்திற்கான அடிப்படையான முயற்சிகளைப் பற்றி எண்ணவோ, அவற்றைச் செய்யவோ, இன்றுள்ள வேறு இயக்கங்களுக்கோ, கட்சிகளுக்கோ, கொள்கையோ, கோட்பாடுகளோ இல்லை. இக்கூற்று வெறும் செருக்காலோ பெருமிதத்தாலோ கூறப்பெறுவதன்று; ஆராக் கவலையாலும் அக்கறையாலும் - சொல்லப் பெறுவது என்பதை மிகவும் பணிவோடு சொல்லிக் கொள்கிறோம். மிகமிகச் சுருக்கமாகச் சொல்வதானால் நம் கொள்கை, வேலிகளை அகற்றுவதன்று; நிலத்தையே உரிமையாக்குவது. அதேபோல் நம் முயற்சியும் நமக்காகக் கொள்கை என்பதன்று; கொள்கைக்காக நாம் என்பது. ஆம், தமிழின முன்னேற்றக் கொள்கையை, தமிழினத்தின் தேவை உருவாக்கிற்று; அக்கொள்கை நம்மை உருவாக்கிற்று. எனவே, இக்கொள்கை வெற்றிபெறும் வரை நம் முயற்சிகள் இதற்குத் தேவைப்படும். நாம் இல்லாமற் போனாலும், அல்லது நம்மால் இயலாமற் போனாலும்,

—தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க

உ. த. மு. க. - வை வலுப்படுத்துங்கள்!

'புறப்பாடு' இதழ் ஐந்து-பற்றிய ஒரு கருத்துரை!

— பறம்பை 'அறிவன்'

'தியான் மியான்' எழுதிய 'போராட்டம்'பாடல். அதில் போராடு, இல்லை எதிரி உயிரைப் பறிவாங்குவான், நாளை நம் எலும்பைக்காட்டி 'அடிமைகளின் எலும்பு என்று நகைப்பான்' என்ற கருத்துக் கவர்ச்சியுடன் உள்ளே பார்வையைச் செலுத்துகின்றேன்.

'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற போர் உணர்ச்சியுடன் நடந்து முடிந்த அப்பு, பாலன் படிமத் திறப்பு விழாப் பற்றிய கருத்துகளைக் கண்டேன்.

'முற்போக்கு இளைஞர் அணி'யின் செயலாளர் ''புதிய மக்கள் நாயகப் புரட்சிக்குப் பின்புதான் தேசிய விடுதலை இயலும்'' என்று பேசியுள்ளார். தேசிய விடுதலை அல்லது தேசிய இன விடுதலை என்பதும் இந்தியாவில் ஒரு புதிய மக்கள் நாயகச்சிக்கல் தான் என்பதை அவர் மறந்துவிட்டார் என்று கருதுகின்றேன்! புதிய மக்கள் நாயகப்புரட்சி உள்ளடக்கத்தில் ஒரு தேசிய இன விடுதலைக்கான புரட்சியாகவும் இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இங்கே அவர் கூறிய மற்றொரு கருத்து 'எல்லாத் தேசிய இனங்களைக் கொண்டு ஒரு குழு' அமைக்க வேண்டும் என்பதாகும்! இக்கருத்து கேட்க இனியது. நடைமுறையில் ஒருவாறு எந்திரப் போக்குடைய சிந்தனையின் வெளிப்பாடாகவே உள்ளது. ஒரு பாட்டாளியக் கட்சிக்குள் இப்படிப்பட்ட குழு என்பது பொருளற்றதாகி விடும்!

திருவள்ளுவன் 'வல்லாண்மைக் காலத்தில் முதலாளி வகுப்பு முற்போக்கை இழந்துவிட்டது. பாட்டாளி வகுப்புத்தான் இன விடுதலையை நடத்தமுடியும்' என்று கூறியுள்ளார்.

'முதலாளி வகுப்பு' இன விடுதலையைத் தொடர்ந்து நடத்தாது. அதன் நலத்திற்காகவும் பாட்டாளி வகுப்புதான் தலைமை ஏற்கவேண்டும் அஃதொன்றே, நின்று போராடும் ஆற்றலுடையது! ஆயின், திருவள்ளுவன் அவ்விடுதலைக்கான போராட்டத்தைப் பற்றியும், திசை வழிபற்றி எவ்வகையான கருத்துக் கொண்டிருக்கிறார் என்பது பற்றியும் கூறியிருப்பார் எனில் தெளிந்துகொள்ளுதல் இயலும்!

அடுத்து கோவை ஈசுவரன் ஒரு தலைப்பில் பேசியுள்ளார். 'தன் முடிவு (சுய நிர்ணய) உரிமைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் பங்கு' என்பது தான் அத்தலைப்பு.

'நடுவணரசு, மாநில அரசுகளை உடைத்து, மக்கள் குடியாட்சி புரட்சி மூலம்தான் உரிமைபெறமுடியும்'' என்ற அவர் கருத்துப்பரிய புறப்பாட்டின் கணிப்புப் படி, புரட்சிக்குத் தேசிய இனச்சிக்கல் தடையா, எப்படிப் புரட்சிக்குத் தேசிய இனங்களை ஒன்றிணைப்பது? என்ற வினாக்களுக்கு அவர் விடைதர முயன்றிருத்தல் வேண்டும்! 'மக்கள் குடியாட்சிப் புரட்சி' மூலம்'அரசுகளை' உடைத்துப்பெறுகின்ற ஒருதன்மையாகத் தேசியத் தன்முடிவு (சுய நிர்ணய) உரிமையைக் கருதுகிறார். இப்படிப்பட்ட தவறான அடிப்படைமீது காட்டப்படும் கருத்துச் சரிவை நாம் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது!

தேசிய இனச் சிக்கல் அடிப்படை முரண்பாடு ஆகாது. ஆனால், அஃது உழவர் புரட்சி வெற்றி பெறுவதில் உள்ளது என்கிறார். உழவர் புரட்சியும், தேசிய இனச் சிக்கலுக்கான போராட்டமும் இணைந்து செல்லவேண்டும் என்பதில் இவர் மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறார்!

வெளி மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் 'தனிப்பட்டவர் அழித்தொழிப்பை 1976-க்குப் பின் கைவிட்டு விட்டோம்' என்று கூறியுள்ளார், இவர்களின் அரசியல் பற்றிய முடிவுகளை இக் கட்டுரையில் நாம் அதிகம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தேசிய இனச் சிக்கலைப்பற்றி இச் செய்தித் தொகுப்பில் அதிகம் எதிர்பார்த்தேன்.

'எங்கெங்குக் காணினும் சாதியடா...'' என்ற தலைப்பு ''சாதிகள் இல்லையடி'' என்று பாடிய பாரதிக்குச் சாட்டையடி. இன்றுள்ள 'அமைப்பு' பழைய சாதிய அமைப்பை அப்படியே கொண்டிருப்பது போன்ற 'தோற்றம்' உள்ளது இத் 'தோற்றம்' உண்மை. ஏனெனில், இதன் மாற்றம் அடித்தளத்தில் பெரிய அளவில் அசைவை ஏற்படுத்தவில்லை!

முகவை மாவட்டம் மாரந்தையில் ஒரு சடங்கு குறித்த 'முரண்பாடு' 'எதிர்ப்பு'க் காரணமாகச் சண்டை ஏற்பட்டுள்ளது. மதுரை திருமங்கல உறுப்பனூரில் அடிமை வேலைக்கான உரிமைச் சண்டை காரணமாகக் கலகம்.

இவற்றுக்குத் தேவர் சாதி தலைமை எடுத்து நடத்திய கலகங்கள். பழைய 'வண்ண முறை' ஒழுக்கம் (வர்ணாசிரமம்) தொடர்ந்த செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காண்கிறோம், இதைத் தகர்க்கும் ஒரு புரட்சிக்கரக் கடமையை இக் கட்டுரை நினைவூட்டுகிறது!

கூடவே, உலக வங்கி என்ற ஆண்டானிடம் பேருந்துக் கட்டண உயர்வைத் தமிழ்நாடு முதல் அமைச்சர் 'அடிமை'யாக நின்று கெஞ்சி வாழ்வதைச் சுட்டிக்காட்டும் 'பெட்டிச்செய்தி' உள்ளது!

வெளிநாட்டார் 'தாளர்' விதைத்து அறுவடை செய்ய 'இந்திய பூமியை'ப் பயன்படுத்துவதில் போட்டியிடுகின்றனர். உலக வணிக முதல் அறிக்கைப்படி, 'ஒன்று போட்டுப் பத்து எடுக்கும்' சுரண்டல் காடாகி உள்ளது 'பாரதம்'! இதில் 'தமிழர்' பட்டுக் கொண்டிருப்பதும் ஓர் அவலம்தான்!

'தென் ஆப்பிரிக்கா-விடுதலைப் போராட்டம் என்ற கட்டுரையிலிருந்து கிடைத்த குறிப்புகள்.

1. இந்தியாவிற்கும்-தென் ஆப்பிரிக்காவிற்கும் பல்வேறு தன்மைகளில் நிறைய ஒற்றுமைகளுண்டு.

2. இரு நாட்டு விடுதலை இயக்கங்களுக்கும்கூட பல ஒற்றுமைகள் உண்டு.

3. இந்தியாவில் 1857 - இல் உரிமைப் போர் நடந்தது. தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டிசை எதிர்த்து, 'சிலு' அரசுப்படைகளின் 1789—80-இல் வீரப்போர் நடந்தது!

4. இந்திய தேசியப் பேராயம் தோன்றிய முப்பது ஆண்டுகட்குப் பின்பு 1912-இல் ஆப்பிரிக்கத் தேசியப் பேராயம் ஏற்பட்டது.

5. ஆப்பிரிக்க 'விண்ணப்ப' இயக்கம், 1943 இல், மண்டேலோ, ஆண்டன் லிம்பேடா போன்றவர்கள் தொடங்கிய இளைஞர் அமைப்பு 1949-இல் ஆப்பிரிக்கத் தேசியப் பேராயத் தலைமையைக் கைப்பற்றியது.

6. 1952-இல் தெ. ஆ. அரசின் கொடுஞ் சட்டங்களை எதிர்த்து முதன் முறையாக எட்டாயிரம் பேர் சிறை ஏகினர். சிறுபான்மை வெள்ளை இன வெறி அரசின் இனப் படுகொலைகளை எதிர்த்து அறப் போராட்டம் நடத்திவந்த விடுதலை இயக்கம், 1960 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது.

7. தெ. ஆ. விடுதலை இயக்கம் தலைமறைவு இயக்கமானது. படைப் போராட்டத்தில் இறங்கத் தீர்மானித்தது.

8 தெ. ஆ. இனவெறியின் கோரப்பிடி-'காலனி'த்துவத்தின் விளைவு - இரட்டைப் பொருளியல் முறை 'காலனி'த் தன்மை கொண்டது. ஆனாலும் சிக்கல் 'காலனிச் சிக்கல்' ஆகாது.

9. 1948 - இல் வெள்ளையரின் தேசியக்கட்சி ஆட்சியைப் பிடித்தது. இது நாசிக் கொள்கை கொண்டது. இனவெறி, நச்சுப்பாம்பு 'பாசிசப்பால்' குடித்தது; சீறியது. அஃது அமெரிக்க - ஐரோப்பா வல்லரசுகளின் வளர்ப்புப் பிள்ளையாக வலுப்பெற்றது. ஆப்பிரிக்காவைத் தனது ஆளுகையின் கீழ்க் கொணர ஒரு வல்லரசாக விரிவடையத் துடிக்கிறது.

10. தேசிய விடுதலை இயக்கத்தில் தெ. ஆ. நீக்ரோக்கள்-சுரங்கத் தோட்டத்தில் உழைக்கும் இந்தியர் உள்ளிட்ட ஆசியர், முற்போக்குள்ள சில வெள்ளையர் சேர்ந்து ஒரு போராட்டப் ''போர்த் தந்திரம்'' (Stratagy) உருவாக்கினர்!

11. 1963—64-இல் அடக்குமுறை கறுப்பு மக்களின் தொழிற் சங்க உறுப்பினர் 50 ஆயிரமாக இருந்து நான்கு இலக்கமாக உயர்ந்தது.

12. ஆப்பிரிக்க தேசியப் பேராயம் படை நடவடிக்கை புதிய வழிமுறை-மக்களைத் திரட்டுவதில் அக்கறை காட்டியது.

13. 1960-இல் ஒரு குண்டூசி கூடச் செய்யமுடியாத தெ. ஆ. அரசு இப்போது அணுகுண்டு செய்கிறது. புதிய கருவி ஆக்கம் ஏற்றுமதி செய்யும் அளவு முன்னேற்றம்.

14. தெ. ஆ. மக்கள் விடுதலை இயக்கத்திற்கு ஆதரவுதந்த மொசாம்பிக், அங்கோலா, லொசாத்தே தெ. ஆ. அரசுடன் உடன்பட்டுப் போகும் சூழ்நிலையை ஏற்படுத்தி யுள்ளது.

15. தெ. ஆ. இன வெறிக்கு, அமெரிக்கா-மேலை நாடுகள் நேரில்-மறைவில் ஊட்டமளிக்கின்றன.

16. பன்னாட்டு வணிக உறவுக்கழகம் (Trans-national Corporation), 1960 இல் காங்கோ ஆட்சிக் கவிழ்ப்புக்குக் காரணமான (Cap-to Kantaga axis) நிறுவனத்தின் இயக்குநர்கள் தெ. ஆ. இன வெறிக்கு ஆதரவாக உள்ளனர்.

17. அமெரிக்க அரசு, ஐ நாவின் உணர்வுகளுக்குப் பகையாகவுள்ளது என்று கருதியபோதும் நடவடிக்கை எடுக்க ஆண்மையின்றி உள்ளது.

18. மண்டேலா நெடுங்காலமாகச் சிறையில் உள்ளார். தெ. ஆ. பொதுமைக் கட்சித் தலைவர் பர், (Doctor) யூசுப்பாடு கடந்த ஆண்டு மறைந்து விட்டார்.

19. தெ. ஆ. அரசுக்கு உதவி, கருவி வழங்கக் கூடாது எனப் பன்னாட்டு நிறுவனங்களை இந்திய அரசு கட்டாயப்படுத்த வேண்டும்.

இது கட்டுரை படிக்கும் வேளை 30-9-84 தினமணி ஆசிரியவுரையில் 'தென் ஆப்பிரிக்கத் தேர்தல்' பற்றி எழுதப்பட்டுள்ளது! அதில உள்ள கருத்துரைகள்: 1. உலக நாகரிக மக்கள் வெறுப்பது இனவாரி ஒதுக்கல் கொள்கை. 2. நாடாளுமன்றத்தில் வெள்ளையர் கலப்பு இனத்தினர் (ஐரோப்பிய நீக்ரோ கலப்பு இனத்தினர்) இந்தியர் பரம்பரை வழியினர் ஆகிய மூன்றினத்திற்குத் தனித்தனி அவைகளைத் தெ. ஆ. அரசு ஏற்படுத்தியுள்ளது. 3. கலப்பு இன அவைக்கு 30% பேரே வாக்களித்தனர். இந்தியப் பரம்பரை வழியினர்க்கு 18% பேரே வாக்களித்தனர். இதன்மூலம் தெ. ஆ. அரசின் 'ஒதுக்கல்' கொள்கையைப் புறக்கணிக்கப்பட்டிருப்பது தெளிவு. 4. இந்த அவைகளுக்கு உறுப்பினரை ஈர்க்க மாதம் 30,000 உருபா சம்பளம் தர அறிவிக்கப்பட்டுள்ளது. 5. இத் தேர்தலில் அமீன்சந்த் ராகபன்சி என்ற டர்பன் 'கசாப்பு'க்கடை விற்பனையாளரின் தலைமையில் உள்ள தேசிய மக்கள் கட்சியும் பூவாலிங்கம் என்ற வழக்கறிஞர் தலைமையில் உள்ள ஐக்கியக் கட்சியும் கலந்தன. இவை அடிவருடிக் கட்சிகள். 6. காந்தியாரால் தொடங்கப்பட்ட நேட்டால் இந்தியப் பேராயத்திற்குக் காந்தியாரின் பேர்த்தியின் கணவர் இராம. கோவிந்தன் தலைவர். அக் கட்சியும் பிற அமைப்புகளும் எதிர்த்துப் போராடின. விளைவு 173 இந்தியத் தலைவர்கள் சிறைப்பட்டனர். 7. தெ. ஆ. வில் 160 இலக்கம் கறுப்பர், 28 இலக்கம் கலப்பு இனத்தவர், 87 இலக்கம் இந்தியர் உள்ளனர். 8. 78% உள்ள கறுப்பர் நாட்டில் அவர்களை ஒதுக்கி விட்டு நடப்பது நாடாளுமன்றத் தேர்தலாகாது. 9. பிரித்தாளும் சூழ்ச்சியைக் கறுப்பு இனத்தவரும் இந்தியரும் எதிர்க்கின்றனர். தேர்தலைப் புறக்கணித்தனர். 10. மக்கள் நாயகம் என்பது பெரும்பான்மை மக்களின் குரலுக்கு மதிப்பு வழங்குவதாகும். 11. இந்தியா தேர்தலை மோசடி என வண்ணனை செய்துள்ளது. 12. ஒதுக்கலை எதிர்ப்பதில் இந்தியர் பெரும்பான்மை மக்களிடம் இணைந்திருப்பதை வரவேற்றுள்ளது தினமணி.

'ஒடுக்குதலை' எதன்பேரில் செய்தாலும் மக்களுடன் சேர்ந்து எதிர்த்து நிற்பது கடமை என்பதை இவ்விரு செய்திகளும் உணர்த்துகின்றன!

அடுத்து 'புறப்பாடு' பகுதிக்கு வருவோம்! ''தீண்டாமை எதிர்ப்புச் சட்டம் என்ன செய்கிறது?'' என்ற வினாத் தலைப்புள்ள கட்டுரையில் வருவன நம் இந்த அரசின் முரண்பாட்டைக் காட்டும்!

சோ. பஞ்சாப் - காவல் துறை - இப்படிப் பல நிறைவளிக்கும் சூடான சிக்கல்கள் 'புறப்பாடு' இதழில் அம்பலமாகியுள்ளன. 0

தமிழினத் தலைவர் - என்றொருவர் எதற்கு?

ஈழத் தமிழரின் தாங்கொண்ணுக் கொடுமைகள், தமிழினத்தின் அடிமைத்தனம், தமிழக ஏழை மக்களின் அல்லல், தமிழகம் பின்னுக்குத் தள்ளப்பட்ட நிலை, சேலம் இரும்பு உருக்காலை நிறுவாமை, ஊட்டியில், புகைப்படச் சுருள் உருவாக்கத் தொழிலகம் அமைக்காமை, தஞ்சையில் கன்னெய் கிடைப்பதை எடுக்க முயற்சி செய்யாமை, குமரிநாட்டுத் தொல்பொருள் வரலாற்றாய்வுக்குச் சிறிதும் செவி சாய்க்காமை, தூத்துக்குடித் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு உதவாமை, இந்தித் திணிப்பைக் கைவிடாமை, பிறமாநிலத்தவரை தமிழகத்தில் ஊடுருவவிட்டுத் தமிழ்ப் பண்பாட்டு நாகரிகத்தைக் கெடுப்பதோடு, தமிழகச் சொத்தைக் கொள்ளையடிக்கும் கயமை - இப்படிப் பலப்படியான சிக்கல்களுக்கு என்றும் தீர்வு வராமல் செய்துக் கொண்டிருக்கிற பார்ப்பணீய நடுவண் அரசை எதிர்த்துப் போராடுவதற்குப் பல தேவைகள் இருக்கும்பொழுது, எம். சி. இரா. முதலமைச்சராக அமைக்கப்பட்ட உடனேயே மற்ற அமைச்சர்கள் பதவி ஏற்கவில்லை என்று, எதிர்க்கட்சித் தலைவராக உள்ள கலைஞர் சொல்வதும், இல்லை அது சட்டப்படிதான் நடந்தது என்று அ. தி. மு. க. அமைச்சர் சொல்வதுமாக, போராட்டமும் எதிர்ப் போராட்டமுமாக நடந்து கொண்டிருக்கிற நாடகம் என்றுதான் நிறுத்தப்பெறுமோ; தெரியவில்லை!

இச் சிக்கல்களுக் கெல்லாம் தீர்வு செய்யாமல் ஆளுங்கட்சி அமர்ந்திருக்கின்றது என்பதற்காகிலும் தி. மு. க. போராட்டம் நடத்தக்கூடாதா?

உண்மைத் தமிழ்ப் பற்றும், தமிழினப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் இல்லாத இயக்கத்திற்கு, கட்சிக்கு-தமிழினத்தலைவர் என்றொரு தலைவர் எதற்கு?

உழவர், தொழிலாளர் ஒன்றிணைந்து எழுக!

அறமன்ற மொழியாகத் தமிழ் ஆவது எப்பொழுது?

வழக்கறிஞர். புலவர் - கோ. உள்ஒளி. அறி.இ., ச.இ.,

தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாக 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ் திகழ்கிறது. பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் தொடர்ந்து அரசாண்ட பின்னும் தமிழ் உரியமுறையில் அரசுத்துறைகளிலும் ஆட்சிமொழியாக நடைமுறையில் இயங்காத இரங்கத்தக்க நிலை நிலவுகிறது!

இன்றுள்ள முதல்வர், திரு. மா.கோ. இராமச்சந்திரன் ஆட்சியிலும் தக்க அமைச்சரவை இன்றி, மொழியின் நலனைக் கருதாமல் விரைந்து சட்டவழி செயல்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்தத் தகாத செயலே!

தமிழ்நாட்டில் உயர்நெறிமன்றம் நீங்கலாகக் குற்றவியல் முறை மன்றங்களில் 1-4-1977 முதலும், உரிமையியல் முறை மன்றங்களில் 1-2-1982 முதலும் தமிழே முறைமன்றமொழி ஆனாலும், நடைமுறை அனைத்தும் இன்னும் ஆங்கிலத்திலேயே தொடரும் நாணமையற்ற நிலை வியப்பையும் துயரத்தையும் அளிக்கிறது. தீர்ப்புரை உரிமையியல் நெறிமன்றங்களில் தமிழில் வழங்க வேண்டுமெனச் சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர, தமிழ் முறைமன்றமொழியாக விழுப்பமாய் இயங்கத்தக்கவாறு அதற்கேற்ற சட்டங்களை நடைமுறைச்சட்டங்களை, நெறிகளை, குறிப்பாணைகளை, படிவங்களை தமிழில் உருவாக்கவும் மொழிபெயர்க்கவும் தமிழக அரசு தவறி வருகிறது. தமிழ் ஆட்சிமொழியாகி 28 ஆண்டுகளாகியும், சட்டங்கள் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டுத் தமிழில் மொழிபெயர்க்கும் நிலை உள்ளது!

அரசு அலுவலர்களும், முறைமன்ற நடுவர்களும், மற்றும் வழக்கறிஞர்களும், மக்களும் பெரும்பாலும் தமிழராயும், தமிழறிஞராயும் இருந்தும், எதையும் சட்டத்தின் கட்டாயமின்றித் தமிழைக் கையாளும் ஆர்வமும் பழக்கமும் இல்லாக் குறைபாடான உளப்பாங்கு உடையவராய்க் காணப்படும் இழிநிலை உள்ளது.

இந்த அவலநிலை தங்களைத் தமிழினத் தலைவர்களாகக் கூறிக்கொள்ளும் சிலர் தமிழினம் முன்னேற தூய செந்தமிழ் நடைபோகுமென ஆய்ந்துணராத பொய்க்கூற்றைப் பரப்ப முயற்சி செய்கிறார்கள். அதற்கேற்ப, சில சிறதினக் கல்லூரிப் பேராசிரியர்களும் யாப்பு ஒழுங்கில்லா தம் குப்பைப் பாடல்களைப் புதுமைப் போர்வையால் மறைத்துப் பாரதியை முந்துமுறையாகக் காட்டிப் புற்றீசலாகத் தமிழ் நாட்டில் பறக்கவிட்டுப் பணம் புரட்டும் 'புதுமை வணிகம்' செய்யத்துணிந்து, வஞ்சகமாய்ச் செந்தமிழ்ப் பயிர்களைக் களைகளாய்க் கிளைத்துக் கெடுக்கின்றனர். தமிழகத்தே காணப்படும் நல்ல மொழியுணர்வைப் புல்லறிவுடைய மாற்றார் சிலர், வஞ்சகமாய் இலக்கிய, அரசியல் உலகில் உலவவிட்டு ஏற்றம் பெற்றுத் திரிகின்றனர். தொல்காப்பியர் முதலாக, மறைமலை, பாவாணர் வரை ஓம்பிய செந்தமிழ் ஒழுங்கைப், பிறமொழிக்கலப்பாலும் புதுமைப்பாவரிகளாலும் வஞ்சித்துக் கெடுத்தொழிக்கும் முயற்சி துணிச்சலாய்த் தொடர்கிறது. எதுதமிழ், யார் தமிழர், என உய்த்துணரும் அறியாமை தமிழகத்தே இன்னும் உள்ளது. தன் பிறப்பு, நிலம், இனம், குலம், சாதி, சமயம் போன்றவற்றையும் மிஞ்சி, செந்தமிழின்பால் நல்லுணர்வும் பற்றுங்கொண்டு தமிழறாய் எவன் ஒழுகுகின்றானோ அவன்தான் தமிழன்! தமிழை வைத்துத்தின்பவனும் தாயின் உயிரை உண்பவனும் தமிழன் ஆகான்.

அன்று கடவுளை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தப்பெற்ற தமிழ்நாட்டில் இன்று தமிழை வைத்து அரசியல், இலக்கிய ஏய்ப்பு வணிகம் நடத்தப்படுகிறது. இந்த நிலையை நீடிக்கவிட்டால், 'தமிழ் இனி மெல்லச்சாகும்' என்ற கூற்றும் உண்மையாகலாம். 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' எனச் செயல்பட்டு, 'உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் தம் உறவு கலவாமை வேண்டும்' எனும் நெறிமுறைக் கட்டளையைப்பற்றி, தமிழை வைத்து ஏய்த்துத்திரியும் மக்கட் பதடிகளை தமிழ் உலகிற்கு இனங்காட்டி 'தமிழ் இனி மெல்லச்சாகும்' எனும் கூற்றுக்குக் கூற்றமாய் விளங்கி, செந்தமிழ் ஆட்சிமொழியாகவும் முறைமன்ற மொழியாகவும் விழுப்பமாய் இயங்க, செய்தக்க ஆக்கப்பணிகளைத் தமிழர் ஒவ்வொருவரும் தத்தம் துறைவழியே உரிய முறையில் ஆற்றியும் பலதுறை களிலுமவர்களை ஆற்றத் தூண்டியும் திருப்பணிக்குத் துணையாகி உதவுவோம். 0

வாழ்கவே! ஆள்கவே!

தமிழக மக்கள் விடுதலைக்
  கூட்டணி வாழ்கவே! - அது
தழைத்து வளர்ந்து தமிழர்
  நிலத்தை யாள்கவே!
சுமழும் தமிழை இனத்தை
  நாட்டைக் காக்கவே - இந்தக்
கருத்தில் செயலில் ஒன்றுக;
  விடுதலை பூக்கவே. (தமி)

இழிவும் தாழ்வும் அடிமையும்
  துன்பம் தீய்ந்திட - மக்கள்
எல்லாம் யாவும் பெற்றே
  மகிழ்வில் தோய்ந்திட,
கழிசடைக் காமக் கலைகள்
  ஏடுகள் சாய்ந்திட - இனத்தைக்
காட்டிக் கொடுக்கும் இரண்டகத்
  தன்மை மாய்ந்திட (தமி)

ஏய்த்தால் சுரண்டல் என்பன
  யாவும் நீங்கிட - மக்களை
ஏழைய ராக்கும் முதலா
  ளியத்தைப் போக்கிட,
சாய்த்தல் கொள்கை எதையும்
  தூளிதூ ளாக்கிட - என்றும்
சமநிலை வாழ்வை நல்கும்
  பொதுமை தேக்கிட (தமி)

ஒழுக்கம் நேர்மை, நயமை,
  பண்பை நாட்டிட - மீண்டும்
உலகம் வியக்கும் பெரும்புக
  ழைநாம் ஈட்டிட
இழுக்கம் சேர்க்கும் ஆரியப் பண்பை
  ஓட்டிட - நமை
எத்திடு வோரின் கழுத்தில்
  சுருக்கு மாட்டிட (தமி)

உழவும் தொழிலும் வளர்ந்தே
  செழிப்பில் குன்றிட - பிறநாட்
டுதவியை யெதிர்பார்த் திடும்நிலை
  இல்லா தற்றிட
இழந்த ஆட்சி தனைநாம்
  மீண்டும் பெற்றிட - நம்
இன்றமிழ் மாந்தர் விடுதலை
  உணர்வு முற்றிட (தமி)

—பாவலர். கொ. செ. சின்னப்பனார்

தமிழக வானொலி நிலையங்களின் தாழ்ந்த நிலை

– புலவர் அறிவுடைநம்பி –

இன்றைய நிலையில் தமிழைத் தாழ்வுபடுத்தும் செயல்பாடுகள் பல துறைகளிலும், முனைப்புடன் செயல்படுகின்றன. அவற்றில் முதன்மையான பங்கு பெறுவது தமிழ்நாட்டில் உள்ள வானொலி நிலையங்களேயாகும். நமது வானொலி நிலையங்களில் தூய்மையான தமிழையோ, இனிமையான தமிழிசையையோ கேட்க முடிகிறதா? தமிழர்களுக்காக ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் தமிழை அழிக்கும் முறையிலேயே அமைந்திருப்பதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக, 13-9-84 ஆம் நாள் இரவு 9-15 மணிக்கு ஒரு நேர் காணல் நிகழ்ச்சி ஒலி பரப்பானது. கோவை வானொலி மூலமாக. அதில் உரையாடிய பெண் யாரோ ஒரு கல்லூரி மாணவியாம். அவர் உரையாடலில் ஐம்பது விழுக்காடு ஆங்கிலச் சொற்கள், பதினைந்து விழுக்காடு வடச்சொற்கள், மிகுந்தவைதாம் தமிழ்ச் சொற்கள், அதில் இன்னும் கொடுமை என்னவென்றால், அப்பெண் பேசியதிலிருந்து அவர் வேற்று மொழி பேசக் கூடியவராகவே இருக்கவேண்டும் என்று தெரிந்தது. நேருரை காண்பது மற்றவர்களுக்கும் முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே. இந்தத் துப்புக்கெட்ட வானொலி நிலையத்தாருக்குத் தமிழைத் தாய் மொழியாக உடைய, நல்ல தூய தமிழில் பேசுகிறவர்கள் கிடைக்கவில்லையா? அல்லது கொச்சை மொழி பேசும் மொழி மானம் அற்றவர்களையே தேர்ந்தெடுத்து அவர்கள் பேசும் கலப்பு மொழியையே ஒலிபரப்பித் தமிழை இழிவுபடுத்தி, அதில் இன்பம் காண இவ்வாறு செய்கிறார்களா? பாடல் என்றால் கருநாடக இசை என்ற கதறல்; பேச்சோ பெரும்பாலும் கலப்படமான பேச்சு; அறவுரை என்றால் மூடத்தனத்தை முடுக்கிவிடுகின்ற கற்பனைக் கதைகள்; அனைத்து மக்களுடனும் தொடர்பு கொள்ளுகின்ற செய்தித் தொடர்புக் கருவியாகிய வானொலி தமிழ் நிலத்தில் தமிழுக்குக் கேடு செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. இதைத் திருத்தவேண்டாமா? பாடம் புகட்டவேண்டாமா? மூடத்தனத்தில் மூழ்கிக்கிடக்கும் இம்மக்கள் உணர்வுபெற்று, உண்மையுணர்ந்து இக்கொடுமைகளைக் களைய, சிலிர்த்தெழுவது எப்போது? எப்போது?

'தென்மொழி'யே இக்காலத்திற்கு ஓர் அளவுகோள்!

ஒரு வீட்டிற்கு வாயிற்படி என்பது ஆறடிதான் இருக்கிறது. நாம் ஐந்தடி இருக்கிறோம் என்பதற்காக நம் இல்லத்தின் வாயிற்படியை ஐந்தடிக்குக் குறுக்கி வைத்துக் கொள்வதில்லை. அப்படி நாம் குறுக்கி ஐந்தடிக்கு வைத்துக் கொண்டால், நம் இல்லத்திற்கு வருகின்ற ஐந்தரை அடி அல்லது ஆறடி உயரம் உள்ளவர் எப்படிக் குனிந்து வருவார்களோ, அதே போல்தான் நாமும் நாலடி உள்ளவர்கள் வீட்டிற்குள் குனிந்து போக வேண்டியவர்களாகி விடுவோம். எனவே இவ்வகையில் எப்படி நாம் ஒரு பொதுமுறையை இன்றியமையாததாகப் பின்பற்றுகிறோமோ அதே போல்தான் மொழியையும் கடைப்பிடிக்க வேண்டும்.

நம் தேவைக்கேற்ப, அல்லது நம் அறிவுக்கேற்ப நாம் மொழியைச் சுருக்கியும், சிதைத்தும், பிற மொழி கலந்தும் பேசிக்கொண்டிருப்பது ஒட்டு மொத்தமான மொழியின் வளர்ச்சியை தன்மையை, நிலையைச் சிதைப்பதாகும்

—வாயிற்படியின் அளவு குறைக்கப்படுவதினால் ஏற்படும் தொல்லை வெளிப்படையாகத் தெரிவது போல், மொழியின் சிதைவால் ஏற்படுகின்ற தொல்லை வெளிப்படையாகத் தெரிவதில்லை.

அவ்வகையில் மொழிக்கான ஒரு முழுமையான அளவு கோளாகத்தான் இக்கால் 'தென்மொழி' தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

—'பாவலரேறு' அவர்களின் பேச்சிலிருந்து

வெள்ளையர்-அல்லாதாரை மட்டும் கொல்லும் காட்டு விலங்காண்டிக் கருவி!

ஆப்பிரிக்கர்களையும், வெள்ளையரல்லாத மற்றவர்களையும் மட்டும் கொல்லும் புதிய நச்சுயிரிக் கருவி ஒன்றைத் தென் ஆப்பிரிக்க இனவெறி ஆட்சி உருவாக்கிக் கொண்டிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சி. கௌத்ரா என்பவர் இந்தத் தகவலை உலக ஒன்றிய நாடுகளவை அதிகாரிகள் குழு ஒன்றிடம் கூறியதாக யு.பி.ஐ. செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. குடியிரப்பு நாடுகள் கலைப்புக்கான உ.ஒ. குழுவின் அறிக்கையில் அந்தத் தென் ஆப்பிரிக்காக்காரர் கூறிய சான்றியம் (சாட்சியம்) சேர்க்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்கர்களையும், ஆசியாக்காரர்கள் மற்றும் வெள்ளையரல்லாத மக்களை மட்டும் தாக்கும் நோய் நச்சுயிரிக் கருவிகளைத் தென் ஆப்பிரிக்க படைத்துறை ஏற்கெனவே ஆய்வு செய்யத் தொடங்கி விட்டதாக சி. கௌத்ரா கூறினார். இந்த நோய் நச்சுயிரிக் கருவிகள் வெள்ளையரைத் தாக்குவதில்லை. இந்த நச்சுயிரிகள் அரசியல் சிறையாளிகளின் உடலில் செலுத்தப்பட்டு ஆய்வு நடத்தப்படுவதாகவும் அவர் சொன்னார்.

டிரான்சுவாலின் வட பகுதியில் உள்ள லூயி டிரிச்சார்ட் என்ற நகரில் உள்ள ஒரு கமுக்க ஆராய்ச்சிக் கூடத்தில், அமெரிக்கத் திறவோர்களின் உதவியுடன் இந்தக் கருவி உருவாக்கப்படுகிறது. கறுப்பர்களை மட்டும் கொல்லும் கருவி உருவாக்கும் கொடிய கருத்து, அமெரிக்காவில்தான் முதலில் தோன்றியது. வியத்நாம் போரின் போது அது செயல் படுத்தப்பட்டது.

அதே சமயத்தில், அமெரிக்கா, மற்றும் டெல் அவிவ் யூத இனவெறித் தலைமையின் உதவியுடன் "இனவெறிப் போர்" நடத்த பிரிட்டோரியா இனவெறி-ஆட்சி ஏற்பாடு செய்து வருவதாக 'இசுப்பெக்டேட்டர்' என்ற காறு கிழமை இதழ் கூறுகிறது. தென் ஆப்பிரிக்கா, மற்றும் இசுரேலியக் காட்டு விலங்காண்டிகள் அமெரிக்கப் பெண்டகன் ஆராய்ச்சிகளைப் பயன்படுத்திக் கொண்டு நச்சுயிரிக் கருவிகளைக் கூட்டாக உருவாக்குகின்றனர். 0

வடக்குக் கதவினை இறுக்கப் பூட்டுக!

கழக முதல்வரின் அறிக்கை!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் செய்யும் ஒரு கால கட்ட முயற்சியை, இவ் வியசகத்தில் ஈடுபட வருபவர்கள் அவரவர்களின் கால கட்டங்களில் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். இறுதியில் வெற்றி தமிழினத்திற்கே.

20) இம் முயற்சி திருவள்ளுவர் காலத்தில் தொடங்கப் பெற்றது; பெரியார் காலத்தில் விளங்கிக் கொள்ளப் பெற்றது; எவர் காலத்தில் முடிவடையுமோ, அதைக் காலந்தான் சொல்ல முடியும்.

21) இன்றுள்ள நிலையில், நம் கொள்கைக்கும் அதன் முயற்சிகளுக்கும் அகத்தும் புறத்தும் பெரிய எதிர்ப்புகள் உண்டு; இழிவுகள் சாற்றப்படுவதும் உண்டு; முதுகுக் குத்தல்கள், வஞ்சகங்கள், இரண்டகங்கள், கால்வாருதல்களும் - நிறைய உண்டு

22) அகத்தே உள்ள தடைகள், நம் குடும்பத்தைச் சேர்ந்த மனைவி மக்களில் தொடங்கி, நம் இயக்க அன்பர்கள், ஆதரவாளர்கள், துணையாளர்கள், செயலாளர்கள், அமைப்பாளர்கள் முதலிய அனைவரிடமிருந்தும் வருவன. அவர்கள் நம்மை அறியாமலும், அறிந்து கொண்டும், அவர்களின் தந்நலத்தாலும், ஆசை அங்காப்புகளினாலும் நமக்கும் நம் கொள்கைகளுக்கும் நம் இயக்கத்திற்கும், முயற்சிகளுக்கும், அன்பு, குடும்பஉரிமை, நட்புக்கெழுதகைமை, கொள்கை விளங்காமை, இணக்கமின்மை முதலிய பல நிலைகளாலும், தடையாக விருக்கின்றனர்.

23) புறத்தே உள்ள தடைகள், நம் கொள்கைகள் போலவும், முயற்சிகள் போலவும், இயக்கம் போலவும் உள்ள பிற தோழமை இயக்கங்களாலும், எதிர்வு அமைப்புகளாலும், ஆட்சி அதிகார வல்லாண்மைகாரர்களாலும் வருவன.

24) கடந்த முப்பத்தைந்தாண்டுகளாக நாம் தெள்ளிதின் அறிந்து, நம்வாழ்வில் செயத்தக்கன என்று உணர்ந்து தேர்ந்த தமிழியக் கொள்கையினையும், விடுதலைக் கோட்பாட்டினையும், எந்தச் சூழ்நிலையிலும், எத்தகு இடர்ப்பாட்டிலும், எவ்வகையான ஆசை அங்காப்புகளுக்கும் ஆட்பட்டுப் பொருளுக்காகவோ, புகழுக்காகவோ, பட்டம் பதவிகளுக்காவோ, ஓர் இம்மியும் கைநெகிழ்த்ததில்லை. (இப்பொழுதுள்ள தமிழக அமைப்புகளில் ஒரு பத்தாண்டிற்கு முன், அவற்றின் தலைவர்கள் பேசிவந்த, எழுதிவந்த, கடைப்பிடித்து வந்த கொள்கைகளை-கோட்பாடுகளை இன்று தலைமாற்றிக் கொண்டு, அதே வாயாலும், அதே கையாலும், அதே உணர்வாலும், வேறுவகையாகப் பேசி வருவதையும் எழுதி வருவதையும், செய்து வருவதையும், இவ்விடத்தில் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.)

25) இத்தகு கொள்கைக் கைநெகிழ்க்கா உறுதிக்குச் சில நிகழ்பாடுகளை (அவை தன்விளக்கம் சான்றவையாக இருப்பினும்) எடுத்துக் காட்டுகளாகச் சொல்லியே ஆகல் வேண்டும். இவற்றுள் சிலவற்றை இதுவரை, ஓரிரண்டிடங்களில் வாய்மொழியாக அல்லது எங்கும் எதற்காகவும் வெளிப்படுத்தியதில்லை. அனைவரும் இவற்றை நன்கு எண்ணரிப் பார்க்கவும். (மற்றும் இவை எம் பெருமைக்காகச் சொல்லப் பெறுவதில்லை. எம் கடமை நோக்கிற்கும், பொதுவுணர்வுக்கும், கொள்கையுரத்திற்கும் சான்றுகளாகவே கூறப் பெறுகின்றன. அன்பர்கள் பொறுத்துக் கொள்க.)

25-1) மறைந்த திரைப்படப் பாடலாசிரியர் திரு கண்ணதாசன் முடுக்கபாகப் படங்களுக்குப் பாட்டெழுதிக் கொண்டிருந்த காலம் அது. (1955-56 ஆண்டளவில்) புதுவையிலிருந்து நாமும், நெருங்கிய அன்பர் ஒருவரும் சென்னைக்கு வந்திருந்தோம். அக்கால் நம்மை வந்து, சென்னையில் தங்கிக் கொண்டு திரைப்படத்திற்குப் பாடல்கள் எழுதித் தருமாறும், பாடல் ஒன்றுக்கு 500, 1000 வாங்கிக் கொள்ளுமாறும், படப்பிடிப்பாளர் ஒருவர் கேட்டுக் கொண்டார். அதற்கு, இங்கு வந்து இருந்து கொண்டு நாம் பாட்டெழுத முடியாதென்றும், தேவையானால் நம் பாடல்களை வீடு வந்து வாங்கக் கொண்டு போகுமாறும் - நாம் பெருமிதத்துடன் கூறிவிட்டுச் சென்றோம். அன்று திரைப்படத்தில் நுழைந்திருந்தால் இன்று ஏராளமாகப் பணம் திரட்டியிருக்க முடியும்.

25-2) அப்பொழுதெல்லாம் (1952 முதல் 1954 வரை) யாருக்கும் எளிதில் கிடைக்காத ஏராள வருவாயை உடைய பல அரசுப் பணிகள் நம் தகுதி நோக்கி நமக்குக் கிடைத்தன. காவல்துறை ஆய்வாளர், கூட்டுறவு ஆய்வாளர், கூட்டுறவுத் துறைத் தணிக்கையாளர், நடுவண் ஆயத்துறை ஆய்வாளர், காட்டுத்துறை எழுத்தர் - போலும் பணிகள் நம்மைத் தேடி வந்தன. சிலவற்றை நாமே தவிர்த்தோம். சில பணிகளை ஏற்றுத் தமிழ்மேல் உள்ள ஆராப் பற்றால் காலஅளவில் அவற்றினின்று விலகினோம். அவற்றுள் கூட்டுறவுத் துறைத் தணிக்கையாளர் பணியும், காட்டுத்துறை எழுத்தர் பணியும் அக் காலத்தில் கொள்ளை வருவாய்களை உடைய பணிகள். மாதச் சம்பளமும் மிகுதி. அதுவன்றி, நாளொன்றுக்கு 50,100,200 என்று கேளாமலே பணங்கள் வந்து குவியும். அதுவும் நாம் பணியாற்றிய காலத்தில் நேராகக் கண்டு துய்த்தது. ஆனால், பாவேந்தர் பாரதிதாசனாரிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடன், சேலம் மாவட்டத்தினின்று, புதுச்சேரி வர விரும்பியதாலும், அதற்கு வாய்ப்பாக அஞ்சல் துறையில் பணிகிடைத்ததாலும், மிகுவருவாயுடைய அப்பணிகளையெல்லாம் வேண்டாம் என்று ஒதுக்கி விட்டுப் புதுவை வந்தோம். அன்று அவற்றை ஒதுக்கியிரா விட்டால் நாமும் மிகப்பெரும் செல்வத்தை ஈட்டிக் கொண்டு, பெரும் பதவியிலிருந்து ஓய்வுபெற்று, மிகு வளத்துடனும், நலத்துடனும் இன்று வாழ்ந்து கொண்டிருந்திருப்போம். தமிழால் தடம்மாறினோம்.

25-3) புதுவையில் அஞ்சல்துறையில் நாம் பணியாற்றிக்கொண்டிருந்த (1954-59) காலத்தில், தொடக்கத்தில் புதுவை தனி பிரஞ்சு நாடாக விருந்தது. இந்தியாவுடன் சேரவில்லை. அக்கால் தங்கம் 70,75 உருபாவுக்கு அங்குக் கிடைக்கும். வெளியே 200 உருபா அளவுக்கு விற்றது. நம்முடன் பணியாற்றியவர்களெல்லாம் ஒவ்வொரு மாதச் சம்பளத்திலும், ஒன்று அல்லது இரண்டு பவுன் தங்கம் வாங்கிச் சேர்த்து வைப்பார்கள். அல்லது அதைப் புதுவையில் வாங்கி வெளியே கொண்டு போய் விற்றுப் பணம் பண்ணுவார்கள். சிலர் தங்கத்தை விட்டு வைரத்தையே வாங்கி, சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்குப் போய் விற்றுக் கொள்ளை ஊதியம் சம்பாதிப்பார்கள். வைரங்களும் பிரான்சிலிருந்து புதுவைக்கு அப்பொழுது ஏராளமாக வரும். மேலும் நாம் தொடக்கத்தில் அஞ்சல்துறையில் ஏற்றிருந்த சிப்பப் பிரிவில் (Parcel Dept.) வரும் வெளிநாட்டுச் சிப்பங்கள் சில, பைகளை உடைத்துக்கொட்டுகையில், சிப்பங்கள் உடைந்து அவற்றிலுள்ள செயற்கை வைரங்கள் தரையில் சிதறும் அக்கால் நம்முடன் பணியாற்றிக் கொண்டிருந்த பணியாளர்கள் சிலர், அவற்றைத் தாம் முன்பு கையாடிய பழக்கத்தால், நம்மையும் அவ்வாறு செய்து, பணம் பண்ணத் தூண்டுவர். ஆனால், அம்மணிகளில் ஒன்றுதானும், ஓர் ஆசைக் கேனும் நாம் கைதீண்டியதில்லை.

இனி, இவை மட்டுமன்றி, அக்கால், புதுவையில் புழக்கத்திலிருந்த பிரஞ்சு உருபா தாள், எத்துணை அழுக்கேறினாலும், எவ்வளவில் கிழிந்திருந்தாலும் செல்லும் தகையது. ஆயினும் அங்கிருந்த மக்கள் நம் இந்திய உருபாத் தாள்களையே மதித்தனர். ஏனெனில், இத்தாள்கள், பிரஞ்சுத்தாள்களைவிட அழகாகவும் இருக்கும் - அவர்களின் இந்தியச் செலவாணிக்கும் பயன்பட்டன; எனவே, நம் இந்திய ஓர் உருபாத் தாளுக்குப் பிரஞ்சுப் பணமாக ஒன்றே கால் உருபா கிடைக்கும். நாம் பணியாற்றியது இந்திய அஞ்சல் துறையாக இருந்ததாலும், நம் புழக்கத்துக்கு இந்திய உருபாக்களையே நமக்குச் சம்பளமாகக் கொடுத்ததாலும், நம்முடன் பணியாற்றும் உடன் ஊழியர்கள் அனைவரும், தங்களுக்குக் கிடைக்கும் தாள்களையெல்லாம், பிரஞ்சு உருபாக்களாக மாற்றி ஒன்றுக்கு ஒன்றேகாலாக பெரும் ஊதியம் பெற்று வந்தனர். நாம் அவற்றை யெல்லாம் ஒருபோதும் விரும்பியதில்லை. சில நேரங்களில், இந்திய உருபாத்தாளை விரும்பிக் கேட்டவர்களுக்கு, எந்த ஊதியமுமில்லாமல் பெரும் அளவில் மாற்றிக் கொடுத்திருக்கின்றோம். சிலமுறை நாம் கருவூலகராகவே பணியாற்ற வேண்டியிருந்த நிலையினில் கூட எமக்குப் பொருளீட்டும் ஆசை வந்ததில்லை.

(தொடரும்)

எடைகாட்டும் கருவியில் இந்தி!

நமது தமிழ் நாட்டின் இந்திமொழி வல்லாண்மை அஞ்சல், தொலைவரி, வைப்பகங்கள், தொடர்வண்டி நிலையங்களில்தாம் என்று நம் எல்லோரும் நினைத்து கொண்டு உள்ளோம். ஆனால் நாம் நம் உடலின் எடை பார்க்கும் கருவியில் நாம் பத்து காசு நாணயத்தைப் போட்டால் நம் எடையுடன் கூடிய சிறுஅட்டை வெளிவருகிறது. அந்த எடை சரியோ, தவறோ என்று தெரியவில்லை. ஆனால் அந்த அட்டையின் பின் பக்கம் திருப்பினால் உங்களுடைய நற்காலம் பற்றி அச்சிட்டுள்ள சில வரிகளைப் பார்த்தால் அவை முழுவதும் இந்தியும் ஆங்கிலமுமாகவே தாம் உள்ளன. தமிழே இல்லை.

நம் தமிழ் நாட்டின் பேருந்து நிலையங்களில் எடைபோடுபவர்கள் யாராக இருக்கும்? நம் தமிழர்கள் தாமே! வெளி மாநிலத்துக்காரர்களோ அல்லது ஆங்கிலேயர்களோ பேருந்து நிலையத்துக்கு வருபவர்கள் இல்லை. நம் தமிழர்கள்தாம் 100-க்கு 100 பேர். இந்தத் தமிழர்கள் தமிழை மட்டும்தான் படித்தவர்கள். 100 க்கு 10 பேர்தாம் ஆங்கிலம் முழுமையாகப்படித்தவர்கள். ஆனால் இந்த அட்டையில் இருப்பனவோ ஆங்கிலமும், இந்தியும்தாம். தமிழே இல்லை.

அந்த அட்டைகளின் மேலே சிறிது இடைவெளி இருக்கும். இருந்தும் கூட தமிழ் எழுத்தைப் போடாமல் இருப்பது என்னென்று தெரியவில்லை. தமிழனிடம் நாம் எதைச்செய்தாலும் கண்டுகொள்ள மாட்டான் என நினைத்துவிட்டார்கள் இவ் வடநாட்டான்கள். மேலும் நம் தமிழ்த் தானைத் தலைவர்கள், தளபதிகள் இந்திப் போராட்டம் நடத்தினால் தான் அந்த இடைவெளியில் தமிழைப் போடுவார்களா என்று நினைக்கக்கூடும்

நாம் ஒரு சின்ன செய்திக்குக்கூட தமிழைப் போட வேண்டும் என்று போராட்டம் நடத்தினால் தான் போடுவான் என்ற நிலை உருவாகியுள்ளது இதற்கெல்லாம் வடநாட்டாரிடம் எவ்வளவு தரம் போராடிப் பெறுவது. இதற்கொரு விடிவுக்காலம் வராதா. அய்யகோ, தமிழா! வடவனிடம் எத்தனை நாளைக்குத்தான் உரிமைகளைப்போராடிப் பெறுவது? தமிழா இவற்றுக்கெல்லாம் ஒரே தீர்வு, தனித் தமிழ்நாடு அடைய முற்படுவதே நமது நோக்கமாகும்.

— அ. மு. தங்கவேலன், பல்லடம்.

தவிர்க்க வியலா அச்சுப் பிழைகள்!

அன்புடையீர்! தென்மொழி, தமிழ்ச் சிட்டு தமிழ் நிலம் - ஆகியவற்றுள், எவ்வளவு கவனித்தாலும், ஆங்காங்கே சில அச்சுப் பிழைகள் வந்து விடுவதை உணர்கிறேன். இம் மூவிதழ்களும் கட்டாயம் வெளியிடப் பெற்றே ஆகல்வேண்டும் என்னும் கடமை நோக்கில் நடத்தப் பெறுவன என்பது அனைவரும் அறிந்ததே. இவற்றுக்குப் பெரும் முதலீடுகள் இல்லை. மிகுதியாக இல்லையென்றாலும் ஒரு கணிசமான அளவு தானும் இல்லை என்பதை நெருங்கிய சிலர் அறிவர். மிக எளிய முதலீட்டில், பற்பல இயக்கப்பணி, சொற்பொழிவுப்பணி, எழுத்துப்பணி என்னும் தீராத வினையழுத்தங்களுக் கிடையில், ஓரிரண்டு தொழிலாளர்களை வைத்துக்கொண்டு, ஒரு சிறிதும் ஒய்வில்லாத நிலையில், மிகுந்த இழப்புகளுக் கிடையில், இப்பணிகள் தட்டுத் தடுமாறி நடந்து வருகின்றன. நாமும் எம் இளைய மகன் பொழிலும் (அவர் ஆங்கிலம் படித்தவர்) தவிர, வேறு புலவரோ பேராசிரியரோ என ஒருவரும் துணையில்லாத நிலையில், நான் எழுதுவனவெல்லாம் அச்சுத் திருத்தவும், செப்பனிடவும் ஆன செயல்களில் சிற்சில பிழைகள் வந்தே விடுகின்றன. எம்மால் இதற்குமேல் என்ன செய்யமுடியும்? மிகுதியான சம்பளம் கொடுப்பின் திறமையாளர் சிலரைப் பணிக்கு அமர்த்தமுடியும்! ஆனால் பணத்திற்கு எங்கே போவது? வருகின்ற தொகை அச்சுக்கும் தாளுக்கும் வாடகைக்குமே பற்றும் பற்றாததுமாகி விடுகிறது சிறிய சம்பளத்தில் உழைக்க வருதற்கு யார் விரும்புகிறார்கள்? நம்மவர்கள் தொண்டர்களாக வர விரும்புகின்றனரே தவிர. ஈக மனப்பான்மையுடன் உழைப்பாளர்களாக, பணியாளர்களாக வர விரும்புவதில்லையே! என்ன செய்வது பணி நிலை சீராகும் வரை, செயல் நிலை இப்படித்தான் இருக்கமுடியும். அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

—ஆசிரியர்;

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS, C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு! திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.